# காலமும் கருத்தும் கனவேகமாய் மாறுகிறது!

Phone No 4502
விலை [ அரை அணா
Regd. No. M. 5458
இலங்கை 5 சதம்

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A.
MALAI MANI
( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1] சென்னை (20—2—50) வெளியீடு (21—2—50) [ இதழ் 173

## புத்துயிர் அளிக்காவிடில் புதையுண்டுபோகும் காங்கிரஸ்!

## அடுத்து வரும் தேர்தல் முடிவு எப்படியாகுமோ!

### ஆவனசெய்யாவிடில் ஆட்சிபறிபோகும்

### காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் பண்டித நேரு அலறல்!

"உலகம் வேகமாக மாறிக்கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் காங்கிரஸ் தன்னுடைய பழைய போக்கிலேயே போய்க்கொண்டிருப்பது கூடாது. காங்கிரசுக்குப் புத்துயிர் தேவை. காங்கிரசில் இளைஞர்களுக்கு அதிகமாக இடமளிக்கவேண்டும். ஆசியாவில் நாளுக்கு நாள் புது சக்திகள் வளர்ந்து வருகின்றன. இங்ஙனம், வளர்ந்துவரும் புது சக்திகளுக்கேற்ப காங்கிரஸ் தனது போக்கை மாற்றிக்கொள்ளவேண்டும்.

அடுத்து வரவிருக்கும் பொதுத் தேர்தலில் காங்கிரஸ்காரர்கள் கண்ணுங் கருத்துமாக இருக்கவேண்டும். அந்தத் தேர்தலின் முடிவு எப்படியாகும் என்று யாராலும் சொல்ல முடியாது. நான் அதுபற்றி கவலைப்படவில்லை. ஆனால், எந்த விஷயமும் காங்கிரஸ் எப்படி நடந்து கொள்ளுகிறதோ அதைப் பொறுத்துதான் இருக்கிறது."

"தேர்தல் காலத்தில் பலர் பலவித கருத்துக்களை மக்களிடையே பரப்பக்கூடும். ஆகவே, காங்கிரஸ்காரர்கள் மக்களிடம் அதிகத் தொடர்பு கொள்ள வேண்டியது மிகமிக அவசியமாகும். அவர்கள் மக்களுடைய மனப்பான்மையை அறிந்து அதன் வழி நடக்க வேண்டும்."

"காங்கிரஸ்காரர்கள் தமக்குள்ளேயே பதவிக்காப் போட்டுக்கொண்டிருப்பார்களாகில் அவர்களுடைய இடத்தை வேறு யாரேனும் பற்றிக் கொள்ளுவார்கள், எனவே எல்லாவகையிலும் பழைமையை விலக்கிப் புதுமையை மேற்கொள்ள வேண்டுவது காங்கிரஸார் கடன்."

புதுடில்லியில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தனிக்கூட்டத்தில் பேசிய பண்டித நேரு, மேற்கண்ட கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்.

"ஆழமான கடலுக்கும், ஆர்ப்பாட்டக்காரப் பேய்க்குமிடையே அகப்பட்டுத்தவிப்பதுபோல" என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழியுண்டு. அம்மொழிக்கேற்ப; காங்கிரசின் பிற்போக்குத் தன்மைக்கும், காலவேகத்திற்குமிடையே அகப்பட்டுக்கொண்டு அவதிப்படுகிறார். பண்டிதநேரு முதலாளிவர்க்கமும், பழைமைப்பித்தர்களும் காங்கிரசைத் தமக்கொரு கோட்டையாகக் கருதிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் அப்படிப்பட்ட கோட்டையிலிருந்து அந்த இரண்டுசக்திகளையும் விரட்டிவிட்டு கோட்டைக்குப் புதுமெருகுகொடுக்க நினைக்கிறார் நேரு. அந்த நினைப்புதான் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் அவரது பேச்சாக வெளிப்பட்டிருக்கிறது. காங்கிரசுக்குப்புத்துயிர் அளிக்கவேண்டும், இளைஞர்களுக்கு இடமளிக்கவேண்டும், காலப்போக்கை அனுசரித்து நடக்கவேண்டும், எனறெல்லாம் கதறுகிறார்.

ஏன் இந்த நிலைவந்தது பண்டிதருக்கு என்றால், தேர்தல் நெருங்குகிறது. அதிலே காங்கிரஸ் வெற்றிபெறவேண்டும். இன்றேல் காங்கிரஸ் இந்தியாவின் கோமின்டாங் கட்சியாகும் என்ற கவலைதான்!

அந்தக் கவலையால் உந்தப்பட்ட காரணத்தால் தான், "தேர்தலில் எப்படிப்பட்ட முடிவு ஏற்படும் என்று சொல்ல முடியாது" என்று கவலை கலந்த குரலில் பேசு

(தொடர்ச்சி 4-ம் பக்கம்பார்க்க)

## உலக நாடுகளுடன் ஆஸ்திரேலிய வாணிபம்

### "எங்கள் விருப்பம்போல் நடப்போம்"

### பிரிட்டனுக்குத் தகவல்

ஸிட்னி, பிப். 19—

உலக நாடுகளுடன் நடத்தும் வாணிபங்களில், தங்கள் விருப்பப்படி இனி நடந்துகொள்ள முடிவு செய்திருப்பதாக, ஆஸ்திரேலியா பிரிட்டனுக்கு அறிவித்திருக்கிறதென்று குளேப் நிருபர் கூறுகிறார். இதனால் பிரிட்டன் ஆஸ்திரேலியா உறவு முறிந்துவிட்டதாகக் கொள்வது தவறு என்றும் அவர் கூறுகிறார். ஆஸ்திரேலியா ஜப்பானுக்குக் கம்பளம் கொடுத்துவிட்டு, பெட்ரோல் பெறவும் தீர்மானித்திருக்கிறதென்று கூறப்படுகிறது.

### சிந்துநதிமீது மற்றொரு அணை

லண்டன், பிப். 18—

சிந்துநதிமீது மற்றொரு அணைக்கட்ட பாகிஸ்தான் ரூபாய் 52,000,000 ஆர்டரை பிரிட்டனுக்கு அளித்திருக்கிறது. எழு பிரிட்டிஷ் என்ஜினீரிங் கம்பெனிகள் இந்த அணையைக் கட்டி முடிக்கும்.

### பிரிட்டனிலிருந்து நாய்கள் ஏற்றுமதி

பல்வேறு ரகப்பட்ட 1500 நாய்கள் இவ்வாண்டு பிரிட்டனிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட விருக்கின்றன. இதனால் ஆண்டில் ரூ. 20,00,000 கிடைக்கும் என்றும் இதில் பெரும்பாகம் டாலராகவே இருக்கும் என்றும் தெரிகிறது. (குளோப்)

## 'ஆண்டவரு'க்குப் பாதுகாப்பு!

### போப்பாண்டவருக்கு துப்பாக்கிப் படைகள் பாதுகாப்பளிக்குமாம்

லண்டன், பிப். 19—

முன்புபோல் அல்லாமல் போப்பாண்டவர் பாதுகாப்புப்படையினர் இப்பொழுது துப்பாக்கிகள் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

போப்பின் ஸ்விஸ் பாதுகாப்புப் படையினர் இதுவரை வாடிகனில் தளவாடங்கள் உபயோகிக்க அனுமதிக்கப்படுவதில்லை. இப்பொழுது இவர்களுக்குத் தளவாடப் பயிற்சி அளிக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

## பர்மாவுக்குக் காமன்வெல்த் கடன் உதவி

### லண்டனில் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது

பர்மாவுக்குக் காமன்வெல்த் கடன் உதவி அளிப்பது சம்பந்தமாக பேச்சுவார்த்தைகள் ஒயிட்ஹால் அதிகாரிகளுக்கும், பர்மிய ஸ்தானீகருக்குமிடையே நடைபெறுவதாக செய்தியறிந்தவட்டாரங்களில் கூறப்படுகிறது.

பர்மிய ஸ்தானீகர் பெவினையும் நேற்று சந்தித்துப் பேசியதாகத் தெரிகிறது. அநேகமாக 60 லக்ஷம் பவுன் கடன் அளிக்கப்படலாம் என்றும், இந்தியா, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா இக்கடனில் பங்குதரத் தயாராக இருப்பதாகவும், தென்ஆப்பிரிக்கா நியூஜிலந்து தயாராக இல்லை என்றும் தெரிய வருகிறது.

## பிராங்கோ பிரதமர் பதவியிலிருந்து விலகுவார்?

### "ஸ்காட்மன்" பத்திரிகையின் தகவல்

லண்டன், பிப். 19—

ஜெனரல் பிராங்கோ ஸ்பெயினின் பிரதமர் பதவியிலிருந்து விலகி, ராஜாங்கத் தலைவராக மட்டுமிருப்பார் என்றும், லிஸ்பனில் ஸ்பெயின் ஸ்தானீகராகவுள்ள நிகொலஸ்; பிரதமராக்கப்படலாம் என்றும், 'ஸ்காட்மன்' பத்திரிகை கூறுகிறது.

அமெரிக்கா ஸ்பெயினுடன் நல்லுறவை ஏற்படுத்தி, தன் ஸ்தானீகர்களை அனுப்பலாம் என்ற சமிக்ஞையையொட்டியே இம்மாறுதல் செய்யப்பட்டிருக்கலாம் என்றும், இது நிச்சயமாக ஸ்பெயின் விஷயத்தில் அமெரிக்கக் கொள்கையில் ஏற்படவிருக்கும் மாறுதலையே காட்டுவதாகும் என்று அப்பத்திரிகை கூறுகிறது.

### பெல்ஜிய மன்னர் பதவிக்கு லியோபால்டு வர ஆதரவு

லியோபால்டு மன்னர் பெல்ஜியத்தின் அரசராக வரவேண்டும் என்பதை ஆதரித்து, மடேம் ஆலிவ் மூர் டிடேஸ்டாக் என்பவர் ஒரு துண்டு பிரசுரம் வெளியிட்டு பெல்ஜியம் முழுவதும் பரப்பியிருக்கிறார். இவைகளில் சில முதலில் பறிமுதல் செய்யப்பட்டதென்றாலும் இதில் ஆட்சேபகரமானது எதுவும் இல்லை என்று அதிகாரிகள் அனுமதித்து விட்டனர்.

முன்பு ஹெப்பலிஸெலாவை ஆதரிக்க வேண்டும் என்கிற இயக்கத்தை இவர்தான் நடத்தினாராம். இவர் தங்களது கமிட்டி மெம்பரல்ல என்று லியோபால்டு ஆதரவாளர்கள் கூறுகின்றனராம். லியோபால் மன்னரை ஆதரித்தோ எதிர்த்தோ எவ்வித சுவரொட்டிகளையும் ஒட்டக்கூடாதென்று, ப்ருஜல்ஸ் நகர கௌன்சில் உத்திரவிட்டிருக்கிறது.

## இருட்டிலேதான் யோசனை உதிக்கிறதாம்!

### பிரிட்டிஷ்ஆசிரியையின் தனி வழி

பிரிட்டிஷ் நாவல் ஆசிரியை வினிபெருட்பீஹாக் என்பவருக்கு கண்ணைக் கட்டிக்கொண்டு இருட்டாக ஆக்கினால் தான், நல்ல நாவல்கள் எழுத யோசனைகள் உதிக்குமாம். இவர் தன் 17-வது வயதிலே நாவல் எழுத ஆரம்பித்து 88 நாவல்கள் எழுதியிருக்கிறார்.

இவர் சமீபத்தில் தான் 77 ஆம் வயதில் காலமானார். —குளோப்

லண்டன், பிப். 19—

வெஸிஷியாவின் பாலைவனத்தில் சில ஆராய்ச்சிகளை நடத்த பிரிட்டனிலிருந்து விஞ்ஞான கோஷ்டி செல்லவிருக்கிறது. —குளோப்,

## ஆப்பிரிக்க சுதேசிகள் மனநிலை கண்டு அதிகாரிகள் கலக்கம்

### சுதேசிகளை அப்புறப்படுத்த யோசனை

லண்டன், பிப். 19—

தென்னாப்பிரிக்காவில் சமீபத்தில் ஏற்பட்ட கலவரங்களுக்குப் பின், ரேண்ட் சுதேசி பகுதிகளில் அமைதி நிலவி வருகிறதென்றாலும், சுதேசிகள் மனநிலை பெரும் ஆபத்தை ஏற்படுத்தும் என்று அதிகாரிகள் பீதிகொண்டிருக்கின்றனர். மேலும் கலவரம் ஏற்பட்டால், அதை ஒடுக்க பலத்த போலீஸ் படைகள் தருவிக்கப்பட்டிருக்கின்றன.

ஜோஹென்னஸ்பர்க் நகரகௌன்ஸில் நகரில் இரு வெள்ளையர் பிரதேசத்திற்கிடையேயுள்ள சுதேசிகள் பகுதியிலுள்ள சுமார் 1000 பேர்களை, 1 கோடி பவுன் செலவில் வெளியேற்றிவிடும் திட்டம் பற்றி தீவிரமாக ஆலோசித்து வருவதாகக் கூறப்படுகிறது.

# மாலை மணி

சென்னை 20—2—50 திங்கட்கிழமை


## சாகவில்லை - : : இருக்கிறார்கள்!

"கிராமங்களில் விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலையில்லை.

கிராமங்களைவிட்டு வேறிடங்களுக்குச் செல்ல அவர்களுக்கு முடியவில்லை.

கிராம மக்களிடம் உணவு ரேஷன் கார்டுகள் உள்ளன, ஆனால் ரேஷன் வாங்குவதற்குப் பணமில்லை.

கிணறுகள் வறண்டுவிட்டன; குடிப்பதற்குத் தண்ணீர் கிடைப்பதில்லை.

கால்நடைகளுக்குத் தீவனம் கிடைப்பதில்லை."

என்றாலும் "ஜில்லாவில் யாரும் பட்டினியால் சாகவில்லை."

என்று, இருக்கும் நிலைமையைத் தெளிவுபடுத்திவிட்டதாகக் கருதிக்கொண்டு, அப்படித் தெளிவுபடுத்திவிட்ட காரணத்தினாலேயே கடமைகள் தீர்ந்துவிட்டதாக எண்ணிக்கொள்ளும் வகையில், கோவை மாவட்டத்தின் பஞ்ச நிலைமையை வர்ணிக்கிறார் மந்திரி பக்தவத்சலனார்.

பஞ்சம் படமெடுத்தாடும் பகுதியாகிய தாராபுரம், உடுமலைப்பேட்டை, பல்லடம் ஆகிய தாலுகாக்களில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு, அங்குள்ள நிலைமையைத் தெளிவுபடுத்தும்போதுதான், மேற்கூறியவாறு கூறுகிறார் மந்திரியார் கோவை மாவட்டத்தைச்சேர்ந்த அந்தப் பஞ்சம் படர்ந்துள்ள பகுதியில், 'மக்கள் உயிருடன் இருக்கிறார்கள்-யாரும சாகவில்லை' என்று கூறி திருப்தியடைகிறார் இந்நாட்டின் மராமத்து மந்திரி.

தொழிலில்லை, வேறிடம் செல்லத் துணிவில்லை, வேலை செய்யவோ உடலில் வலுவில்லை, வேலை தேடிக்கொள்ளவும் வகையில்லை, கையிலோ பணமில்லை, உணவு பெறவும் வழியில்லை, கால்நடைகளைக் காப்பாற்ற வசதியுமில்லை, அவற்றிற்கு வேண்டிய தீவனம் இல்லை, கிணறுகளிலோ நீரில்லை, நீர் குடிப்பதற்கும் வழியில்லை, என்றாலும் 'யாரும் சாகவில்லை' என்று கூற ஒரு அமைச்சரும், அவர் அமர ஒரு மந்திரி சபையும் நாட்டிற்குத் தேவையா? உணவும் நீருமின்றி உயிர் நாற்பது நாட்களுக்கு ஊசலாடும் என்று கூறுவர், அனுபவம் வாய்ந்தோர். அப்படி உயிர் ஊசலாடும உடலங்களைக் கண்டுவிட்டுதான், யாரும்சாகவில்லை' என்று கூறுகிறார் மந்திரியார்.

'இல்லை' வெண்பா பாடிவிட்டு விடுவதாலேயே தம் கடமை தீர்ந்து விடுகிறது என்று கருதுகிறாரா அமைச்சர்? இப்படிக் கேட்டால், அடக்குமுறை அம்பை வீசுகின்றனர் ஆளவந்தார்கள்! நாசகருப்புச் சட்டமும், பேனா முறிப்புச் சட்டமும் நிறைவேற்றுகின்றனர்! வளம இல்லை, எல்லாம் வறண்டுவிட்டன என்பதை நிலைமை காட்டியும், மக்கள் சாகவில்லை என்று நாடிப் பரீட்சை பார்த்துக்கொண்டிருக்கிறது ஒரு அரசாங்கம் என்றால், அதைப் பற்றிஎன்னஎண்ணுவது? மந்திரியார் கூறும் நிலைமையைமுன்னிறுத்திப்பார்த்தால், கோவை மாவட்டத்தில் 'வங்கம்' உருவாகிவருகிறது என்பதும், கூடிய விரைவில் பட்டினிப் பிணங்கள் மடமடவென்று சாயும் என்பதும் தெளிவாகத் தெரிகின்றன.

வறண்ட நிலைமையை வளப்படுத்த-இல்லாமையைப் போக்க-குடிநீரைக் கொடுக்க-உயிருக்கு உணவூட்ட-பட்டினிப் பட்டாளத்தைக குறைக்க பட்டினிச் சாவைத் தடுக்க அரசாங்கம் என்ன கடமைகளை எடுத்துக்கொண்டது? ஏதாவது முயற்சியில் ஈடுபட்டதா? அப்படி முயன்றிருந்தால், என்ன பலன் எந்த அளவுக்கு ஏற்பட்டது? எதிர்பார்க்கும் கொடுமைக் காட்சிகள் ஏற்படாவண்ணம் பார்த்துக் கொள்ள என்ன வழிவகைகள் காணபட்டன? அதைப்பற்றிய குறிப்பினைத்தர அமைச்சர் முன்வரவில்லை. அப்படித் தருவதற்கு ஏதொன்றுமில்லாமலா ஆட்சிப்பீடத்தை அலங்கரித்துக்கொண்டிருக்கின்றனர் ஆளவந்தார்கள்? எப்பொழுதும், எல்லாவிடத்திலும், எதற்கும், கூறித் தப்பித்துக்கொள்வதற்கென்றே மந்திரிமார்கள் பயன்படுத்தும் சொற்களான "ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன!" என்பனவற்றைத் தானே மந்திரி பக்தவத்சலனாரும் இப்படிப்பட்ட நிலையிலும கூறுகிறார்? "ஏற்பாடுகள்" எங்கே செயல்களாக உருவாயின? இதனை மக்களின் சார்பாகக் கேட்டால், அமைச்சர்களுக்கு ஆத்திரம் வருகிறதேயல்லாமல் அறிவுடம்பட்டமாற்றம் வருவதில்லையே!

பஞ்சம் பற்றி நிற்கும் பகுதிகளான அந்தத் தாலுக்காக்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்த முன்னாள் அமைச்சர் தோழர் டி. எஸ் அவினாசிலிங்கம் அவர்கள், "பஞ்சம் ஏற்பட்டிருக்கும் இடங்களைச் சுற்றிப் பார்த்து வந்ததில், நிலைமை மோசமாக இருப்பதாகத்தான் தெரிகிறது. தாழ்த்தப்பட்டவர்களுக்கும், குடியானவர்களுக்கும உடனடியாக கிணறுகள் வெட்டவும், கால்நடைகளுக்கும் தீவனம் வெளியிலிருந்து, தருவித்துத் தர வேண்டும் என்றும், கிராம வாசிகள் யோசனைகள் கூறுகிறார்கள். கிராமங்களில் குளம் குட்டைகள் மராமத்து செய்யப்பட வேண்டும். பொது மக்கள் ஸ்தாபனங்கள் முன்வந்து குழந்தைகளுக்குப் பால் கொடுக்கவும, குருடு,வயதானவர்கள் மற்றும் சக்தியற்றவர்களுக்கு உணவு அளிக்கவும், உதவவும் வேண்டும்" என்று கூறியுள்ளார். அவரும் நிலைமையை விளக்குகிறாரே யொழிய, அரசாங்கம் செய்ததையோ, செய்யவேண்டியதையோ, கூறவில்லை. கூற முடியவில்லை.

கோவை மாவட்டத்தின் பஞ்சம் உடனடியாக அகற்றப்படவேண்டும்; இல்லையாயின் பல சாவுகளைப் பஞ்சம் பலி கொண்டுவிடும் என்பது உறுதி "சாகவில்லை - இருக்கிறார்கள்!" என்று சொல்லிவிடுவதில் ஆளவந்தாரின் கடமை அடங்கிவிடவில்லை; 'சாவு இல்லை-வாழ்கிறார்கள்' என்பதைச் செய்து காட்டுவதில்தான், அரசாங்கத்தின் பொறுப்புணர்ச்சி அடங்கியிருக்கிறது என்பதை வலியுறுத்த விரும்புகிறோம். எனவேதான், பஞ்சம் போக்குத் திட்டம் தீட்டி, செயலாற்றுக என்று, ஆளவந்தார்களைப் பிரஜைகள் என்ற முறையிலே வற்புறுத்துகிறோம்.

# அறிக்கை

சேலம் சிறை சம்பவம் பற்றி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் தோழர் சி. என். அண்ணாத்துரை கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளார்:—

'சேலம் பரிதாபம்' அறிந்ததும் திடுக்கிட்டேன், 22 பாதுகாப்புக் கைதிகள், மாண்டனர். 139 பேர் குண்டடிபட்டுக்கிடக்கின்றனர் என்ற செய்தி என் உள்ளத்தைக் குலுக்கியது.

22 உயிர்கள் போய்விட்டன; இவ்வுலகில் அந்த உருவங்களை இனிக்காண முடியாது. செத்துவிட்டனர்—சாகடிக்கப்பட்டுவிட்டனர். 22 குடும்பங்களில் 'மாண்டாயோ, என் மகனே! குண்டுபாய்ச்சிக் கொல்லப்பட்டாயோ என் மகனே!' என்ற கூக்குரல் அழுகுரல் ஒலித்துக்கொண்டிருக்கும். நினைக்கவும் நெஞ்சு குமுறுகிறது—வாழப்பிறந்த மக்கள் சமுதாயத்திலிருந்து, இருபத்து இரண்டுபேர் பிரிக்கப்பட்ட காட்சி, பரிதாபம் நிரம்பி, மக்கள் மன்றத்தைக் குலுக்கிவிட்டது-கொந்தளிக்கச் செய்திருக்கிறது.

அன்பு, அஹிம்சைகொண்டு ஆளப்போவதாகக்கூறி ஆட்சிபீடமேறியோரின் அரசாங்கத்தில்—துப்பாக்கி துரைத்தனம் நடந்திருக்கிறது. சிறைச்சாலைக்குள், காவல் கைதிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டிருக்கிறது.

மக்கள், காங்கிரஸ் ஆட்சியில் எதிர்பார்த்தது ஏராளம். சுயராஜ்யம் வந்ததும் தொல்லைகள் மறையும், வெள்ளையன் கெடுபிடி ஒழியும், அன்பு ஆட்சி. அமைதி அரசாங்கம் ஏற்பட்டு புது வாழ்வு கிடைக்கும் என்று நம்பினர். நம்பும்வகையில், நாடாள வந்தவர் நாள்தோறும். மக்களிடைப் பேசி வந்தனர்—பெருமையுடன்கூடி சொல்லினர். 'எங்கள் ஆட்சி வரட்டும். இவ்வளவு தர்பார் நடத்துகிறானே வெள்ளையன், இப்படியா நடக்கும்! பொதுஜன சர்க்கார் ஏற்பட்டால் இன்பம் பொங்கும்" என்றெல்லாம்.

சுதந்திரப் போரிலீடுபட்ட காரணத்தால் அந்நிய ஆதிபத்தியம் காங்கிரஸ் கட்சியினரை அடக்குமுறை அம்புகளால் தாக்கியிருக்கிறது, சிறை, தடியடி, துப்பாக்கி—முதலானவைகளுக்கு ஆளாக்கியிருக்கிறது. அப்போதெல்லாம் காங்கிரஸ்காரர்கள் எழுப்பிய கண்டனக்கூச்சல்கள் ஏராளம். அந்த அடக்குமுறை வீச்சுகளைக் கண்ட மக்கள் சக்தி, மகத்தானதாகத் திரண்டு-காங்கிரசைப் பலப்படுத்தியது: வெள்ளையன்ஆட்சியை நடுங்கவைத்தது!

அன்று, அடக்குமுறைகளைக்கண்டு குமுறிக்கொந்தளித்து 'தேச பக்தர்'களானவர்கள், இன்று ஆட்சிபீடம் ஏறியதும்அதே அம்புகளை வீசுவது பரிகாசத்துக்குரியதல்ல; பரிதாபம் நிரம்பியது!

அடக்குமுறை ஆட்சியை எதிர்த்துப் போராடியவர்களே, ஆட்சிபீடம் அமர்ந்ததும், அடக்குமுறையைத் துணைகொண்டு வாழ நினைக்கின்றனர். வெறிப்பாதையில் விளையாடுவதையே வேலையாக்கிக்கொண்டுவிட்டனர். இந்த வேதனையின் உச்சக்கட்டம்-22 பிணங்கள்-சேலம் பரிதாபம்!

பொது ஜன சர்க்கார் என்ற புனிதப் பெயருக்கு மாசு உண்டாக்கிவிட்டார்கள், தங்கள் ஆட்சி வரலாற்றின் ஒரு ஏட்டை இரத்தமயமாக்கிக்கொண்டுவிட்டார்கள்.

இந்நிலை நீடிப்பதை, நாகரீகம் விரும்பும் எவரும் விரும்பமாட்டார்கள். நாட்டு நலனில் அக்கரைகொண்ட எவரும் அனுமதிக்கமாட்டார்கள். 22 காவற் கைதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்-139 பேர் காயம்பட்டுக்கிடக்கின்றனர். சோகம் நிரம்பிய இந்நிகழ்ச்சிக்குக் காரணம் பல காட்டப்படுகின்றன. சுட்டவர்கள் அதிகாரிகள்-சுடப்பட்டவர்கள் ஆட்சியாளரால் அடைத்து வைக்கப்பட்ட கைதிகள்-சுடப்பட்ட இடம் அரசாங்கத்தின் சிறைச்சாலை!

வேதனை நிரம்பிய இச்சம்பவம் பற்றி விசாரணை நடத்த கட்டளையிட்டிருக்கிறது அரசாங்கம். மகிழ்ச்சி. ஆனால்,'விசாரணை நடத்தப்பட்டதாக' முடிந்துவிடக்கூடாது. விசாரணைக் கமிட்டியில், மக்கள் தொடர்புகொண்ட ஒருபிரதிநிதி—திரு. வி. க சக்கரை போன்றோர்-நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். இது பற்றி, பலர் வலியுறுத்தியிருந்தும், ஆட்சியாளரால் இந்த யோசனை புறக்கணிக்கப்பட்டிருக்கிறது; ஏற்கப்படவில்லை!

இந்நிலையில், விசாரணையோடு அதன்பின் ஒரு விளக்கத்தோடு தங்கள் வேலை முடிந்துவிட்டது என்று, ஆட்சியாளர் கருதுவார்களேயானால், துயரம் படரும், சோகம் வளரும், வேதனை விரியும்!

இந்நிலை ஒழிந்து, அமைதி நிலவ சர்க்காரின் போக்குமாற வேண்டும். எதேச்சாதிகாரநிலை மறையவேண்டும். விசாரணையில்லாமல் பிடித்துப் போடுவதும், ஆண்டுக்கணக்கில அடைத்து வைப்பதும் நல்லதல்ல.

நாட்டு வாழ்வில் பலாத்காரம் பரவுவதை எக்கட்சியும் அனுமதிக்காது. மக்களும் ஏற்கமாட்டார்கள். அதுபோலவே, 'பலாத்காரம்' என்ற குற்றஞ்சுமத்தி, எக்கட்சியினர் மீதும் கொடுமை ஈட்டியை வீசுவதையும் சகிக்க மாட்டார்கள்.

சேலம் சம்பவத்தைப்பற்றிய ஒரு 'விசாரணை' நடத்திவிட்டால்மட்டும் போதாது. சேலம் சம்பவங்கள் போன்றவைகள் ஏற்படுவதற்கான சூழ்நிலையை ஒழிக்க, தக்க முயற்சி எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். அடக்கு முறைப்போக்கு அறவே நீக்கப்பட வேண்டும். காங்கிரசல்லாத கட்சியினர் யாவரும் ஒன்றுகூடி, இன்றைய ஆட்சியின் போக்கை உலகறியச் செய்வதன் மூலம் ஆட்சியாளர்களை நேர்வழி நடந்திடச் செய்ய வேண்டும். காங்கிரசல்லாத மற்ற கட்சியினர் உடனடியாக இது பற்றி கவனம் செலுத்தி, கூட்டுமுயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுகிறேன். அடக்குமுறை இப்படித் தலைவிரித்தாடுவதை அனுமதித்துக்கொண்டிருப்பது, அறமாகாது.

**சி. என். அண்ணாத்துரை**
பொதுச்செயலாளர் தி. மு. க.

## அறிவுக் கதிர்!

உலகில் நடைபெற்ற இரத்தம் சிந்தும் பெரும் பெரும் போர்களெல்லாம், மதத்தின் காரணமாகவே நடைபெற்றிருக்கின்றன.

—விவேகானந்தர்

# தி.மு.க. பொதுச்செயலாளர்

## மதுரை மாவட்ட சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

### வத்தலக்குண்டு

(நமது தனி நிருபர்)

வத்தலக்குண்டு, பிப். 9—பட்டிவீரன்பட்டியிலிருந்து இன்று மாலை 6 மணிக்கு தோழர் அண்ணாத்துரை அவர்கள் என். வி. நடராசன், அ. பொன்னம்பலம் மற்றும் தங்கள் குழுவினருடன் இந்நகருக்கு வந்து சேர்ந்தார்.

அவர்களை ஊர் எல்லையிலே காரை நிறுத்தி அண்ணாத்துரைக்கும், நடராசனுக்கும் மாலை அணிவித்து, கூட்டம் நடைபெறும் இடமான பஞ்சாயத்துப் போர்டு மைதானத்திற்கு மேளவாத்தியங்களுடன் ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

ஊர்வலம் செல்லும்போது ஆங்காங்கே தலைவர்களை நிறுத்தி, பொதுமக்களால் பலர்மாலை சூட்டப்பட்டது.

**பொதுக்கூட்டம்**

பின்னர் நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்குமதுரை மாவட்டக்கழகச் செயலாளர் தோழர் தா. ஆவுடையப்பன் தலைமைவகித்தார். தோழர் என். வி. நடராசன் தி. மு. கழகம் இன்று நாட்டிலே பலம்பெற்று வருகிறதென்றும், இதைக்கண்ட தேசியத் தோழர்கள் பயப்படுகிறார்கள் என்றும், தங்கள் கழகம் தேர்தலில் கலந்துகொள்ளப் போவதில்லை என்றும், அதனது அறிவுப் பிரசாரத்தையே செய்கிறதென்றும் அதன் பிரதிபலிதன் இன்று இந்தமாவட்டத்தில் நடைபெறும் கூட்டம் என்றும் பேசினார்.

பின்னர் பலத்த கைதட்டல்களுக்கிடையே தோழர் அண்ணாத்துரை பேசும்போது 'நாங்கள் பார்ப்பனத் துவேஷிகள் என்று எங்கள்மீது தவறு எண்ணப்படுகிறது. எனறும், எங்கள் இயக்கக் கொள்கைகளை ஆதரித்தால் எங்களோடு சேர்ந்து வேலை செய்யலாம் என்றும், படித்த பார்ப்பன மாணவர்கள் சாதிபேதத்தை ஒழிக்கப்பாடுபடவேண்டும் எனறும் கூறினார்.

கூட்டத்திற்கு சுமார் 8000 பேர் வந்திருந்தனர். கூட்டம் தலைவர் நன்றிகூற இனிது முடிந்தது.

உடனே தலைவர்கள் திண்டுக்கல்லுக்குப் பயணமானார்கள். அப்பொழுது, ஒரு பார்ப்பன மாணவர் தோழர் அண்ணாத்துரையிடம் வந்து, தங்கள் பேச்சில் தனக்கு நம்பிக்கை உண்டென்றும், இன்றைய பேச்சினால் எனது மனம் திருப்தி அடைந்துள்ளது என்றும், எனவே இந்த கூட்டத்தில் எனக்குப் பேச சந்தர்ப்பம் அளித்தால், எனது சமூகத்திற்குச் சில யோசனைகள் சொல்வதாகவும் சொன்னார். உடனே அண்ணாதுரை அவர்கள் இப்பொழுது, தான் திண்டுக்கல் போகவேண்டியிருப்பதால், கூட்டமும் முடிந்து மக்கள் கலைந்துவிட்டபடியால் அடுத்ததடவை சென்னையில் நடைபெறும் ஜாதி ஒழிப்புக்கூட்டத்தில், கலந்துகொள்ள சந்தர்ப்பம் உண்டாக்கித்தருகிறேன் என்றார். உடனே அந்த மாணவர் அண்ணாதுரை அவர்களிடம் விடைபெற்றுச்சென்றார்.

### திண்டுக்கல்

திண்டுக்கல், பிப். 9—வத்தலக்குண்டிலிருந்து பொதுச்செயலாளர் அவர்கள், தோழர்கள் என் வி நடராசன் அ. பொன்னம்பலம் ஆகியோருடன் காரில் இந்நகருக்கு இரவு ஒன்பது மணிக்கு வந்தனர்.

பொதுச்செயலாளரின் வருகையை எதிர்பார்த்து சுமார் 50000 மக்கள் மாரியம்மன் திடலில் காத்துக்கொண்டிருந்தனர், நன்கு அலங்காரம் செய்யப்பட்ட பந்தலைச்சுற்றி பல மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

தோழர் அண்ணாதுரை காரைவிட்டு இறங்கிமேடைக்குச்செல்ல இயலவில்லை. அவ்வளவு கூட்டம் நெருக்கிக்கொண்டிருந்தது. பின்னர் அவரை காரிலேயே உட்கார வைத்து, மேடைவரைகாரை ஓட்டிச்செல்ல வேண்டியதாயிற்று. பின்னரும் மேடை மீது இருவர் சேர்ந்து தூக்கிக்கொண்டு சென்றனர். பிறகு கூட்டத்தினர் அமைதியாக அமர்ந்தனர். கூட்டத்திற்குத் தோழர் அ. க. அ. சிதம்பரம் தலைமை வகித்தார்கள். ஏராளமான வரவேற்பு இதழ்கள் அளிக்கப்பட்டு, மலர் மாலைகளும் சூட்டப்பட்டன.

அமைப்புக் குழுசெயலாளர் தோழர் என். வி. நடராசன் முதலில் சிறிது நேரம் தொழிலாளர்களின் குறைகள் பற்றியும், இன்றைய குடியரசு என்பது மிகவும் கேலிக்கூத்தானது என்றும், இந்தக்குடியரசால் நமது மாகாணத்தின் உரிமை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், ஒரு சாதாரண சிலோனுக்குள்ள உரிமை கூட நமக்கில்லை என்றும் வெகுதெளிவாகப்பேசினார்.

அடுத்தபடியாக பொதுச்செயலாளர் தோழர் அண்ணாதுரை பேசும்போது, ஆண்டவன் பெயரால் நடைபெறும் அக்ரமங்களைக் கண்டித்தும், நமது இயக்கத்தின் வளர்ச்சிக்காக, தான்சிலோனுக்குச்செல்லப்போவதாகவும், நமது நாட்டுமக்கள் நன்மை பெறவும், தொழில் வளம்பெருகவும், இந்த நாட்டில் இல்லாமையைப் போக்கி, வகையற்ற தமிழனுக்கு இங்கேயே வாழ வழி வகுக்க வேண்டுமென்றும், தங்கம், பொன், இரும்பு நிலக்கரி, யூரேனியம் அவ்வளவும் இருந்தும் ஏன் நாம் அன்னியநாட்டிற்குத் தண்டனிட்டு இருக்கவேண்டுமென்று தெரியவில்லை என்றும், இவைகளைப் போக்கவேதான் தி.மு. கழகம்பாடுபடுகிறதுஎன்றும், இதில் எல்லோரும் சேர்ந்து நமது நாட்டை நமதாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

செயலாளர் தோழர் என். முத்து நன்றிகூற, கூட்டம் இரவு 11மணிக்குமேல் இனிது முடிந்தது. தலைவர்கள் எல்லோருக்கும் தோழர் அ. க. அ. சிதம்பரநாடார் மாளிகையில் திண்டுக்கல் பத்திரகாளியம்மன் உணவு விடுதி உரிமையாளர் தோழர் அ. வே. மச்சகேந்திரன் அவர்கள் இரவு உணவு நல்லமுறையில் நடத்தினார்கள்.

அன்றிரவு வெகுநேரம் வரை பொதுச்செயலாளரிடம் பல இயக்கத் தோழர்களான எம். ஆர், மத்திரன், இன்னும் பலர் வந்து பேசிக்கொண்டிருந்தனர். மறுநாள் காலையில் தோழர் எம். ஆர். மத்திரன் அவர்கள் இல்லத்தில் தலைவர்களுக்குக் காலை சிற்றுண்டி வழங்கப்பட்டது. பின்னர் இவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு, காலை 10 மணிக்கு தனது குழுவினர்களுடன் கூடலூர் பயணமானார்கள்.

(நநி.)

## தெ. ஆ. மாவட்டத் தோழர்களுக்கு

அன்புடையீர்!

நம் மாவட்ட தி. மு. கழக முதல் மாநாடு 12-3-50-ல் குறிஞ்சிப்பாடியில் நடக்கவிருப்பதால், அதற்கான அக்க வேலைகளிக் கழகத் தோழர்கள் முயற்சியெடுத்து, மாநாட்டைச் சிறந்த முறையில் நடத்துவதற்கான பணிபுரிய முன்வரவேண்டிக்கொள்கிறோம்.

மாநாட்டு நன்கொடை வசூலிப்பாளர்கள் 22—2—50 புதன்கிழமை முதல் நம் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் வருவார்கள். ஆங்காங்குள்ள கழகத் தோழர்களும், மற்றோரும் தக்க பொருளுதவி புரிந்து ஆதரவு தருமாறு வேண்டுகிறோம்.

வரவேற்புக் குழுவினர்
தெ. ஆ. மா. தி. மு. க. மாநாடு
குறிஞ்சிப்பாடி

## இரயில்வேயில் ஆள்குறைப்பு

### 4652-பேருக்கு வேலையில்லை!

இந்தியாவிலுள்ள பல்வேறு இரயில்வேக்களிலிருந்தும் 1950-ஜனவரி 31ந் தேதி முடிய 4652 பேர் வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர் என்று இரயில்வே மந்திரி கே. சந்தானம் இன்று பார்லிமெண்டில் கேள்வியொன்றுக்குப்பதிலளிக்கையில் கூறினார்.

மேலும் அவர் கூறுகையில், நீக்கப்பட்டவர்களில் 9 ஆபீசர்களும், 1893 மூன்றாந்தர உத்தியோகஸ்தர்களும், 2,750 நான்காந்தர உத்தியோகஸ்தரும் உள்ளனர் என்றும், இதனால் ஒரு மாதமொன்றுக்கு ரூ. 4,56,420 மிச்சமென்றும், தெரிவித்தார்.

### அனுதாப வேலைநிறுத்தம்

மன்னச்சநல்லூர், பிப். 18—மதுரையில் 13—2—50 முதல் வேலை நிறுத்தம் செய்திருக்கும் மூடி திருத்தும் தொழிலாளர்களுக்கு அனுதாபம் காட்டும்பொருட்டு 16-2-50ல் மன்னச்சநல்லூர் மூடி திருத்தும் தொழிற்சாலைகள் முழுவதும் கட்டுப்பாடாக கடை அடைத்து வேலை நிறுத்தம் செய்திருந்தார்கள்.

தென் ஆற்காடு மாவட்ட
தி. மு. கழக முதல் மாநாடு
12—3—50 ஞாயிறன்று குறிஞ்சிப்பாடியில்
"திருவள்ளுவர் பந்தலில்" நடைபெறும்
தலைவர் :— இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.
துவக்குபவர் :— பூ. கணேசன் எம். ஏ.
சொற்பொழிவாளர்கள் :—
சி. என். அண்ணாத்துரை எம். ஏ., க. அன்பழகன் எம். ஏ., சேலம். ஏ. சித்தையன், ஈ. வெ. கி. சம்பத், என். வி. நடராசன், டி. கே. சீனிவாசன், இராம. அரங்கண்ணல் மற்றும் பல இயக்கச் சொற்பொழிவாளரும் கலந்துகொள்வர்.
இரவு சி. என். ஏ. குழுவினரால் நடத்தப்படும்
"சந்திரமோகன்" நாடகம் நடைபெறும்
வரவேற்புக் குழுவினர், குறிஞ்சிப்பாடி.

## ஜெர்மன் அதிகாரி பெண்களால் துரத்தப்பட்டார்

### வேலை வேண்டுமென்று 'விளக்கமாறு'டன் துரத்தினர்!

பெர்லின், பிப். 19—பெண்களுக்கு வேலை கொடுத்தாகவேண்டும் என்று சுமார் 25 பெண்கள் துடைப்பக்கட்டை சகிதம் தன்னை வழிமறித்து விரட்டிய வரலாற்றை, மேற்கு ஜெர்மன் பார்லிமெண்டில் உள்நாட்டு காரியதரிசி தெரிவித்தார்.

இதன் விளைவாகவோ என்னமோ ஜெர்மன் உள்நாட்டு மந்திரி காரியாலயத்தில்பெண்களுக்கு வேலைதரும் பிரத்யோகஇலாகா ஒன்றுஏற்படுத்தப்படவிருக்கிறதுஇதன் தலைவராக ஒரு பெண்ணே நியமிக்கப்படுவார் எனறும், பெண்களின் நலனைக் காப்பது, பெண்களுக்குவேலை தருவது முதலிய காரியங்களை இந்த இலாகா கவனிக்கும் என்றும்தெரிகிறது.

### உலக உணவு நிலைமையில் முன்னேற்றம்

லண்டன், பிப். 18—சென்ற ஆண்டில் உலக உணவு உற்பத்தி நிலைமை அபிவிருத்தி அடைந்து இருக்கிறதென்பது சமீபத்தில் எடுக்கப்பட்ட சர்வேயிலிருந்து தெரிகிறது.

சீனா, பர்மா, பிரான்சு இந்தோ-சீனா, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் உணவு உற்பத்தி பெருகியிருக்கிறது. மத்திய கிழக்கில் துருக்கியிலும், ஈரானிலும் மோசமான சீதோஷ்ண நிலை காரணமாக கோதுமை உற்பத்தி மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

சோவியத் யூனியனிலுள்ள நிலைமை பற்றி திட்டமான செய்திகள் எதுவும் கிடைக்கவில்லை. அங்கு யுத்தத்துக்கு முன்பு இருந்ததை விட விளைவாசிகள் மிகவும் அதிகரித்திருக்கின்றன என்று தெரிகிறது.

### சர்ச்சிலுக்கு மாபெரும் சிகார் பரிசு

தேர்தல் பிரசாரத்திற்காக விண்ஸ்டன் சர்ச்சில் வேல்ஸுக்கு விஜயம் செய்தபோது, அவருடைய அபிமானிகள் அவருக்கு மாபெரும் சிகார் ஒன்றை பரிசாக அளித்தனர் இது 10 அங்குல நீளமானது ஜெர்மனியில் 2 ஷில்லிங் 6 பென்ஸுக்கு இறக்குமதி செய்யப்பட்டதாம்.

## ஆசிய அரிசி ரஷியா வசம் போகக்கூடாதாம்

### அமெரிக்க பத்திரிகைகள் அலறல்!

உலக மக்கட் தொகையில் பாதி பேர்களுக்கு முக்கியமான உணவுப் பொருளான அரிசி, இந்தோ—சீனா, தாய்லாந்து, பர்மா முதலிய இடங்களில் ஏராளமாக விளைகிறதென்றும், இந்த முக்கிய—இடங்கள் கிரம்ளின் வசமானால் பெரும் ஆபத்தென்றும், 'நியூயார்க், டைம்ஸ்'' பாவ்டே சர்க்காரை யுனைடெட் ஸ்டேட்ஸ் அங்கீகரித்தது ஏன் என்பதை விளக்கி தலையங்கம் எழுதியிருக்கிறது.

அது மேலும் எழுதுகையில், ஜப்பான், சீனா, இந்தியா, பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, முதலியவைகள் அரிசி உற்பத்தி நாடுகள் என்றாலும், அவைகளின் தேவைகளையே சமாளித்துக் கொள்ள முடியாத நிலைமையில் இருக்கின்றன என்றும் 1948-ல் பர்மா அரிசி சப்ளை நின்றதால் வங்கப்பஞ்சம் ஏற்பட்டது என்றும் ஆகவே இந்த அரிசி சப்ளை ரஷ்யா வசமானால் உலகிலுள்ள பெரும்பாலோர் ரஷ்யாவின் தயவை எதிர்பார்த்து நிற்க வேண்டுமென்றும் குறிப்பிட்டிருக்கிறது.

வறுமையைஎதிர்த்துப்போராடுவதும் ஒரு ஆயுதம்தான் என்பதை மறந்துவிடக்கூடாதென்று அப்பத்திரிகை எச்சரித்திருக்கிறது. (குளோப்)

### மேற்கு ஜாவா கம்யூனிஸ்டு தலைவர் கைது

ஜாகர்தா, பிப். 19—மேற்கு ஜாவா 'டான்மலாக்கா' கம்யூனிஸ்டுகளின் தலைவர் ஷிரெம்சாலே இன்று கைது செய்யப்பட்டிருக்கிறார்.

### அழகிரிசாமி ஞாபகார்த்த முன்னேற்றக் கழகம்

அத்தக்குடி, பிப். 1—அத்தக்குடி கே. வி. அழகிரிசாமி ஞாபகார்த்த கழகம் என்று இருந்ததை, 14-1-50ல் தோழர் எஸ். நடராசன் அவர்கள் தலைமையில் நடந்த அங்கத்தினர் கூட்டத்தில் "அத்தக்குடி கே. வி. அழகிரிசாமி ஞாபகார்த்த முன்னேற்றக் கழகம்" எனமாற்றுவது என்று ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

# கழக நடவடிக்கைகள்

நாகமநாயக்கன்பட்டி:— 5-2-50 தேதி இவ்வூர் தி. மு. க. செயற்குழுக்கூட்டம் கூடியது. அதுபோது கழகச் செயற்குழு உறுப்பினராக கீழ்கண்ட, எஸ். சாமிநாதன், க. சிதம்பரம், அ. நடராஜன் ஆகிய மூவரையும் சேர்த்துக் கொள்வது என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

* * *

பொள்ளாச்சி:—5.2.50 ஞாயன்று தி. மு. வாலிபர் கழகத்தின் செயற்குழுக் கூட்டம் இரவு 9 மணி அளவில் செயலாளர் தோழர் அ. ச. பாலு தலைமையில் கூடி, 19—2—50 ஞாயிறன்று தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், என். ஈ. பாலகுரு ஆகியோரை அழைத்து ஒரு பொதுக்கூட்டம் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

* * *

சென்னை:— 29-1-50-ல் வட சென்னை முற்பகுதியில் (1-வது வட்டம்) திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிர்வாகஉத்யோகஸ்தர்களை முன்னிட்டுதேர்தல் கூட்டம் சி. வி. ராசன் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம்;

செயலாளர்:-ஏ. ஜி. அந்தோணி உதவிச்செயலாளர்:-ஆ. கோ. செகுமார், பொருளாளர்:- வி. அண்ணாமலை, விளம்பர உறுப்பினர்:- எம. ராதா. ஏனைய செயற்குழுவினர்:- சே. அரங்கநாதன், ஏ. சுந்தரம், எம். வேலாயுதம், ஜெ. கே. வில்லியம், சி. வி. ராசன், ஆர். ஏ. ரஹீம், எம். லால் ஆகிய எழுவேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் கெ. வி. எம். கண்ணு, ஆ.கோ.பலராம் ஆகிய 2 பிரதிநிதிகளும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

* * *

மேலாண்மைநாடு—இவ்வூர் தி. மு. க. கிளைக்கூட்டம் 14-1-50 எஸ். செல்லையா அவர்கள் தலைமையில் கூடியது. அதுபோது முன்பிருந்த தற்காலிக செயற்குழுவைக் கலைத்துவிட்டுபுதிய செயற்குழுவினராகக் கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்-எஸ். எம். ராமசாமி; துணைச்செயலாளர்-எஸ். சுப்பையா; பொருள்உறுப்பினர்-எம். மாரியப்பன்; விளம்பரஉறுப்பினர்- எஸ். ஆர். ராஜா. மற்றும் செயற்குழுவினர்கள்:—எஸ். செல்லையா, எஸ். டி. சின்னதுரை, மாசால்ஜராஜா, செல்லக்கணி, வே. துரைசாமி. மாவட்ட பிரதிநிதிகளாக எஸ். செல்லையா, த. சின்னதுரை இரண்டுபேரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

* * *

நார்த்தையன்கார் பேட்டை:— 4-2-50 சனி இரவு ஏழு மணிக்கு நார்த்தையன்கார்பேட்டை தி. மு. க. செயற்குழுக்கூட்டம் சு. நல்லமுத்து அவர்கள் தலைமையில் நடைபெற்றது. செயற்குழுவிற்குத் தோழர் முத்துசாமி, அவர்கட்குப் பதிலாக தோழர் எம். பி. ஆர். லிங்கம் தேர்ந்தெடுக்கப்பட்டார். கழகத்திற்கென வாங்கியுள்ள நிலத்தில் கட்டிடம் கட்ட தோழர் இரெ. இராசசேகரம் தலைமையில் இரண்டுபேர் கொண்ட நிதிக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழுவின் வரவு, செலவு பொறுப்பு முதலியவைகளைத் தோழர் மு. செ. முத்துக்கருப்பன் அவர்களிடம் ஒப்புவிக்கப்பட்டது.

குழுக்கூட்டத்திலேயே தோழர் எஸ். எம். ஆசிம் அவர்கள் ரூ. 100 வசூலித்துத் தருவதாக வாக்களித்தது குறிப்பிடத்தக்கது. 1-1-50-ல் நடந்த திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக்கழக மாநாட்டின் தீர்மானங்களை அப்படியே இக்கூட்டம் ஆதரிக்கிறது. பின்னர் எம். என். என். இராசன் நன்றி நவில கூட்டம் இனிது 8 மணிக்கு முடிவுற்றது.

கழுநீர்:—இவ்வூர் தி. மு. க செயற்குழுக்கூட்டம் 1-2-50-ல் கூடியது. அவ்வமயம் தோழர் அண்ணாத்துரை அவர்களை மார்ச்சமாதம் ஆரம்பத்தில் அழைத்து கழுநீரில் ஓர் பொதுக்கூட்டம் நடத்தவேண்டுமென்று ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதற்கான செலவிற்காக நிதி வசூல் செய்யவேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றிய பின் சுப்பராட்சி, சௌந்திரபாண்டியன், வீராச்சாமி, வில்லியடன் ஆகியோர் அடங்கிய நிதி வசூல் கமிட்டி ஒன்றும் அமைக்கப்பட்டது.

* * *

வேலூர்:— 8—2—50 இரவு 9:30 மணிக்கு தோழர் கோ. கிருஷ்ணசாமி வசதில் கடையில் ஒரு செயற்குழுக் கூட்டம் தோழர் வெ. மா. ரங்கநாதன் தலைமையில் நடந்தேறியது.

அதுபோது, வருகிற 19-2-50 ஞாயிற்றுக்கிழமை தினம், திரு ஏ. வி. பி. ஆசைத்தம்பி, திரு என். வி. நடராசன், ஆகியோரைக் கொண்டு ஒரு பொதுக்கூட்டத்தை நடத்துவது என்றும் ஷை தினத்தில் 26—1—50 குடியரசு தினவிழாவில் நம் கழகக்கொடியை இறக்கியதைப்பற்றி, போலீசாரின் அடக்குமுறைக்குக் கண்டனம்தெரிவிப்பது என்றும் செயற்குழுக்கூட்டம் தீர்மானித்தது.

* * *

திருவல்லிக்கேணி:—தி. மு. க. கிளையின் சார்பில், 5—2—50 ஞாயிறு காலை 9 மணிக்கு திருவல்லிக்கேணி ஐரோடு நகராண்மைப் பள்ளியில், அறிஞர் கா. அப்பாத்துரை தலைமையில் "தமிழர் திருநாளும், திருவள்ளுவர் நினைவு நாளும்" கொண்டாடப்பட்டது. அதுபோது தோழர்கள் என். சிவரத்தினம், எம். கி. திருமலை முத்துசாமி, ராஜவேல், த. கண்ணன் முதலானோர் குறள் பற்றியும், பொங்கல் பற்றியும் விரிந்தமுறையில் பேசினர். பின், செயலாளர் நன்றிகூற கூட்டம் சுமார் 12 மணிக்கு இனிது முடிந்தது.

* * *

திருச்செங்கோடு:— 5.2.50 ஞாயிறு மாலை 6-மணிக்குக் கழகக் கட்டிடத்தில் தோழர் டி. கே. இராமசாமி அவர்கள் தலைமையில் கூடிய தி. மு. கழகக் கூட்டத்தில் "கழகமும் நமது கடமையும்" என்பதுபற்றி தோழர்கள் என். பி. சதாசிவம், டி. ஏ. ஜனாவு; டி. எஸ். அபிலு, டி. எஸ். தங்கவேலு, பசுபதி, செங்கோடன், குஞ்சப்பையன், என். கே. பி. வேல் ஆகியவர்கள் விளக்கவுரையாற்ற தலைவர் பின் னுரைக்குப்பிறகு தோழர் என். பி. சதாசிவம் நன்றி கூறலுடன் கூட்டம் இரவு 10-30 மணிக்கு இனிது கலைந்தது.

* * *

திருவில்லிபுத்தூர்:— 12—2—50 ஞாயிற்றுக்கிழமை 4-30 மணிக்கு செயற்குழுக்கூட்டம் ஆராச்சிபட்டி தெரு பால்டிப்போவில், ச. செந்தியப்பன் தலைமையில் கூடியது. அதுசமயம் வைத்திய வள்ளல் ஈ. வெ. கிருட்ணசாமி அவர்கள் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி தி. மு. கழகத்தின் துவக்க விழா நடத்துவதென்றும், மேற்படி கூட்டத்திற்குத் தோழர் டி. கே. சீனிவாசன் அவர்களை அழைத்துத் துவக்க விழாநடத்துவதென்றும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. பிறகு, கண்ணன் அவர்கள் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

* * *

சேலம் அம்மாப்பேட்டை மெயின்ரோடு:—5—2—5 தேதி ஞாயிறு இரவு 9 மணிக்குக் கழக கட்டிடத்தில் தோழர் ஸ்டாலின் கே. இராமசாமி, தலைமையில் வாராந்திர சொற்பயிற்சிக்கூட்டம் நடைபெற்றது. அதுபோது புராணங்களும், புரட்சி இலக்கியங்களும் என்பதுபற்றி சிறுவர்கள் ரவீந்திரனும், எம். எஸ். ஷேக் முகம்மதும் பிறகு தோழர்கள் அன்பானந்தன், அப்துல்ரஹீம், ராமலிங்கம், என். எஸ். முத்து, பி. ஆர். சோமசுந்தரம், முதலியவர்கள் மிக விளக்கமாகவும், தெளிவாகவும் உணர்ச்சிமிக்க சொற்பொழிவாற்றினார்கள். பின்பு பெரியாரின் தமையனார் வைத்திய வள்ளல் திரு ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்கள் மறைவுக்குறித்து அன்னாரின் குடும்பத்தாருக்கு கழக செயற்குழுவினர்களால் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

சேலம் மாவட்ட முன்னேற்றக் கழக செயற்குழுவிற்குத் தோழர் ஸ்டாலின் கே. ராமசாமி, தோழர் கே. கொண்டையப்பா ஆகியவர்களை ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

* * *

பெரியாம்பட்டி:— 12-2-50-ல் இவ்வூர் தி.மு.க. செயற்குழுக் கூட்டம் தோழர் பூ. ப. அண்ணாமலை தலைமையில் தோழர் பெ. ம. குப்புசாமி இல்லத்தில் கூடி, கீழ்க்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றியது.

வைத்தியவள்ளல் பெரியார் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்கள் இயற்கை எய்திய செய்தியைக் கேட்டு இவ்வூர் தி. மு. கழகம் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களுக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும் தங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

இவ்வூர் தி. மு. கழகத்தின்பிரதிநிதிகளாக பூ. ப. அண்ணாமலை, பெ. ம. குப்புசாமி ஆகியவர்களையும் மாவட்டக் கழகத்திற்கு அனுப்பலாமென தீர்மானிக்கப்பட்டது,

இவ்வூர் தி. மு. க.வின் சார்பாக தோழர என். வி. நடாரசன் அவர்களைக்கொண்டு விரைவில் ஓர் பொதுக்கூட்டம் கூட்டலாமென தீர்மானிக்கப்பட்டது.

செயற்குழு அங்கத்தினர்களிடமிருந்து கழக நிதிக்காக மாதசந்தா 0-8.0 வரை ஒவ்வொருவரிடமிருந்தும் வசூல் செய்யலாமெனத் தீர்மானிக்கப்பட்டது. இவ்வூர் தி. மு. கழக கட்டிட நிதிக்காக கழகத் தோழர்களால் ஒரு நாடகம் நடத்தி அதன்மூலம் நிதிவசூலிக்கலாமென தீர்மானிக்கப்பட்டது.

---

## தெ. ஆ. மாவட்ட தி. மு. க. மாநாடு

### அறிவிப்பு

வரும் 12-3-50-ல் நடைபெறவிருக்கும் தென் ஆற்காடு மாவட்ட தி. மு. கழக மாநாட்டிற்கும் பந்தலுக்குள் "ஸ்டால்கள்" வைக்க விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு 5-3-50க்குள் தெரிவித்துக் கொள்ளும்படி வேண்டப்படுகிறார்கள்.

செயலாளர்,

தெ. ஆ. மா. தி. மு. கழக மாநாடு, குறிஞ்சிப்பாடி, தெ.ஆ. மாவட்டம்.

---


## இரு கனடா துறைமுகங்களுக்கு ராடார் ஸ்கீரீன்கள்

கனடாவின் இருபெரும் துறைமுகங்களான ஹாலிபாக்ஸ், வான்கூவர் இவைகளுக்கு ராடார் ஸ்கீன் பாதுகாப்பு ஏற்படுத்தப்படும் என்றும், இந்தப்பாதுகாப்புடோரொன்டோவுக்கும் ஏற்படுத்துவது ஆலோசனையிலிருந்து வருகிறதென்றும் கனடா பாதுகாப்பு மந்திரி ப்ருக் கிளேக்ஸ்டன் அறிவித்திருக்கிறார்.

எந்த அட்லாண்டிக் உடன்படிக்கை நாடுகளையும் விட பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்ட பணத்தில் பெரும்பகுதியைக் கனடாதன் விமானப்படைகளுக்காக செலவிடுகிறது என்று அவர் கூறினார்.

---


## அறிஞர் அண்ணாவின் படம்



நான்கு கலர்களில் அச்சிடப்பெற்றது

எல்லா ஊர்களிலும் இன்று கிடைக்கும்

தனிப் பிரதி விலை அணா ஆறு

வியாபாரிகட்கு 20% கழிவு

தனிப் பிரதிவேண்டுவோர் எட்டணா மணியார்டர் செய்யவும்.

சொற்ப பிரதிகளே கைவசம் இருப்பதால் இன்றே உங்கள் தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள்.

விவரங்கட்கு:— சௌத் இந்தியா ஸ்டோர் காஞ்சீபுரம்.


## காலமும்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கிறார். காங்கிரஸ் நாட்டு மக்களிடையே செல்வாக்கிழந்து விட்டது, இனி அது கடைத்தேற வழியில்லை, என்பது அவருக்கு நன்றாகத்தெரிந்து விட்டது. எனவேதான் இத்தகைய கவலையும், கலக்கமும் அவரைப் பிடித்தாட்டுகிறது

தேர்தல் காலத்தின் பல்வேறு புதுக் கருத்துகள் நாட்டில் நடமாடக்கூடும் என்பதைச் சுட்டிக் காட்டி, அதற்கேற்ப நடவுங்கள் என்று காங்கிரஸ்காரர்களுக்கு அறிவுறுத்துகிறார்.

காலம் மாறுகிறது, கருத்துக்கள் மாறுகின்றன;எனவே காங்கிரசிலும் மாற்றம்தேவை என்பது அவரது வாதம். இந்த வாதத்தை அடிப்படையாகக்கொண்டு, காங்கிரசின் கருப்பு நிறத்தை வெள்ளையாக்கும் முயற்சியில் அவர் ஈடுபடுகிறார். ஈடுபடட்டும் பாவம்! காங்கிரசிடம் அவ்வளவு பக்தியும், பாசமும் இருக்கிறது அவருக்கு. ஆனால் அவரது முயற்சி பயன் தருமா என்பதுதான் நமது கேள்வி.

காங்கிரஸ், பழைமை, முதலாளித்வம், அரசாங்கத்தின் துணை ஆகியவற்றை நம்பி வாழும்ஸ்தாபனமாகிவிட்டது இனி அதனைச் சீர்திருத்துவது என்பது இயலாத காரியம். காங்கிரஸின் சீர்திருத்தம் முதலாளித்வத்தின் நஷ்டமாகும் அதற்கு அவர்கள் இடங்கொடுப்பார்களா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அப்பொழுதுதான் தெரியும் இதெல்லாம் வீண் வேலை என்பது.

எனவே, பண்டிதரின் முயற்சி ஒருபோதும் வெற்றி பெறாது தேர்தலை எண்ணி எண்ணி ஏங்குவதைத்தவிர, பண்டிதர் போன்றோர் படனுள்ள பணி ஏதும் செய்ய இயலாது.

"தேர்தல் முடிவு எப்படியாகுமென்று சொல்ல முடியாது" என்று சொல்லும்பண்டிதருக்கு நாம் கூறுகிறோம். காலம் மாறிவிட்டது, இனி காங்கிரஸ்அதன் ஆதிக்கத்தைச் செலுத்தமுடியாது. பண்டிதர் எதிர்பார்க்கிறபடி, இரண்டு வரும் புத்துலகக் கருத்துக்கள் என்றும் வெள்ளத்தில் காங்கிரஸ் அடித்துக்கொண்டு போகபடும்என்பது திண்ணம்.

எனவே, பண்டிதருக்கு உண்மையிலேயே புத்துலகப்

பட்டணத்தில் பற்று இருக்குமானால், காங்கிரஸ் என்றும் இடிந்துபோன கோட்டைக்கு வெள்ளையடிக்கும் வீண் வேலையை விட்டொழித்து; நாட்டின் முற்போக்குச்சக்திகளையெல்லாம் ஒன்று திரட்டி சுருத்து வேற்றுமைகளுக்கு இடந்தந்து, நாட்டின் நிலையை நன்கு ஆராய்ந்து இவ்விந்திய உபகண்டத்தில் இன, கலாசார அடிப்படையில் சமதர்மக் குடியரசுகள் தோன்றும்படி செய்தல் வேண்டும், அதை விடுத்து' காங்கிரசுக்குச்சுப்பைக் கட்டு கட்டுவது பயனற்ற பணியே யாகும்.

---

அறந்தாங்கியில்

## தி. மு. க. பொதுக்கூட்டம்

24-2-50 வெள்ளிமாலை 6மணிக்கு "அழகிரி பந்தலில்"

பொன்மலைத் தோழர் ஜி. பராங்குசம் தலைமையில் நடைபெறும்

தி. மு. க பொதுச் செயலாளர் தோழர் சி.என். அண்ணாதுரை

அதிராம்பட்டணம் தோழர் என். எஸ். இளங்கோ ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்

அனைவரும் வருக!

தி மு கழகத்தார், அறந்தாங்கி.

---

## இனி நடப்பவை

சென்னை:—டாக்டர்சி. நடேசன் மன்றத்தின் சார்பில், 21—2—50 செவ்வாய் மாலை 6 மணிக்கு டாக்டர் சி. நடேசனின் நினைவு நாள் கொண்டாடப்பெறும். முன்னாள் அமைச்சர் தோழர் எஸ். இராமநாதன் தலைமைவகிப்பார் தோழர்கள் கா. அப்பாத்துரை, எம். ஏ., எல். டி., இரா. செழியன், எம். ஏ. ஷாபி முகம்மது (முன்னாள் ஷரீப்) ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். இடம்:-பார்த்தசாரதி நாயுடு தெரு, சேப்பாக்கம், நகராண்மைக் கழக ஆண் பாடசாலைக்கு அருகாமை.

* * *

சென்னை:—அப்துல் ஹகீம் இந்து முஸ்லிம் உயர்நிலைப் பள்ளி மாணவர் கழகத்தின் சார்பில் 22—2—50 புதன் மாலை 4-30 மணிக்கு திருவள்ளுவர் நினைவு நாள் விழா நடைபெறும். வித்துவான் கி. வா. ஜகந்நாதன் தலைமை தாங்கிச் சொற்பொழிவாற்றுவார்.

---

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1